**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 02.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 25** |
| Name | : | தர்மலிங்கம் |
| Father's Name | : | கன்னு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கர்நாடகா மாநிலம், சிமோகாவில் Bank of Baroda ல் கிளைமேலாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2024 ம் வருடம் நான் Bank of Baroda தருமபுரி கிளையில் கிளை மேலாளராக பணியிலிருந்தபோது எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருந்த தர்மலிங்கம் என்பவரது மகள் மீனா என்பவரது வங்கி பரிவர்த்தனை பட்டியலை விசாரணைக்காக CBCID போலீசார் கோரியிருந்தார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்கள் வங்கியில் மீனா என்பவர் பராமரித்துவந்த சேமிப்பு கணக்கு எண். 05480100026912 என்ற வங்கி கணக்கிற்கான 27.07.2020 முதல் 12.03.2024 க்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேமிப்பு கணக்கு எண். 05480100026912 என்ற வங்கி கணக்கிற்கான 27.07.2020 முதல் 12.03.2024 க்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் நான் வழங்கியதுதான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **சேமிப்பு கணக்கு எண். 05480100026912 என்ற வங்கி கணக்கிற்கான 27.07.2020 முதல் 12.03.2024 க்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.24 ஆகும். மேற்படி வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் உண்மை தான் என்று நான் வழங்கிய இந்திய சாட்சிய சட்டம் 65(B) ன் கீழான சான்று அ.சா.ஆ.25 ஆகும்.** போலிசார் என்னை அலைபேசியில் விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

மீனா PMKISSAN திட்டத்தின்கீழ் உண்மையான பயனாளரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வங்கி பணபரிவர்த்தனையின் படி மீனாவின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட ரூ.2000/- வீதம் இரண்டுமுறை வரவு வைக்கப்பட்ட பணம் யாரால் எடுக்கப்பட்டது என்றால் 14.08.2020 ம் தேதி மீனா என்பவர் UPI

பரிவர்த்தனை மூலம் அனுப்பியுள்ளார். 14.08.2020 ம் தேதி பிடித்தம் செய்ததாக காண்பிக்கப்படும் ரூ.4000/– மறுபடியும் PM KISSAN திட்டத்தின் கீழ் தவறாக வரவுவைக்கப்பட்டதாக பிடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி பரிவர்த்தனை மீனா UPI மூலம் செலுத்தியுள்ளார். அது பிடித்தம் செய்யப்பட்டதாக பணபரிவர்த்தனை பட்டியலில் இல்லை. PM KISSAN திட்டத்தின்கீழ் வரவுவைக்கப்பட்ட தொகை மீண்டும் PM KISSAN திட்டத்தின் பயனாளர் கணக்கிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 02.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 26** |
| Name | : | வாணி |
| Father's Name | : | க/பெ. ரகு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பெங்களூர் கிளையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2024 ம் வருடம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திம்மாபுரத்தில் கிளை மேலாளராக பணியிலிருந்தபோது வழக்கு சம்பந்தமாக வித்யா என்பவரின் வங்கி கணக்கு பரிவர்த்தனை பட்டியலையும், கணக்கு துவங்குவதற்கான வித்யா அளித்த படிவமும் அதனுடன் இணைக்கப்பட்ட KYC ஆவணங்களையும் கோரியிருந்தார்கள். அதன்படி வித்யா என்பவரின் சேமிப்பு வங்கி கணக்கு எண். 096801000028784 என்ற வங்கி கணக்கின் 01.04.2020 முதல் 31.08.2020 க்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியலை வழங்கினேன். கூடுதலாக 30.06.2018 தேதியிட்ட கணக்கு துவங்குவதற்கான KYC படிவம் அதனுடன் சேர்த்து வித்யா என்பவரின் PAN card மற்றும் ஆதார் கார்டு நகல் வழங்கினேன். மேற்படி ஆவணங்களை 18.03.2024 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B) மற்றும் 2(A) of Bankers book and Evidence Act ன் கீழ் வழங்கினேன். **வித்யா என்பவரின் சேமிப்பு வங்கி கணக்கு எண். 096801000028784 என்ற வங்கி கணக்கின் 01.04.2020 முதல் 31.08.2020 க்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.26 ஆகும். 30.06.2018 தேதியிட்ட கணக்கு துவங்குவதற்கான KYC படிவம் அதனுடன் சேர்த்து வித்யா என்பவரின் PAN card மற்றும் ஆதார் கார்டு நகல் அ.சா.ஆ.27 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

வித்யா PMKISSAN திட்டத்தின்கீழ் உண்மையான பயனாளரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வித்யா என்பவருக்குக்கு PMKISSAN திட்டத்தின்கீழ் வரவு வைக்கப்பட்ட பணம் மீண்டும் பிடித்தம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. PMKISSAN

திட்டத்தின்கீழ் பிடித்தம் செய்யப்பட்டதா என்று தெரியுமா என்றால் பிடித்தம் செய்யப்படவில்லை. உண்மையில் வித்யா கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணம் பிடித்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 02.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 27** |
| Name | : | வினோத் |
| Father's Name | : | முனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கனரா வங்கி MSME கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2023 ம் வருடம் நான் கனரா வங்கியின் பிரதான கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்தபோது CBCID போலிசார் வழக்கு சம்பந்தமாக எங்கள் கிளையில்சேமிப்பு கணக்கு வைத்திருந்த மீனா என்பவரின் வணக்கு எண். 127110043304 கணக்கிற்கான 01.01.2019 முதல் 07.09.2020 வரைக்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் வழங்கினேன். மேற்படி பணபரிவர்த்தனை பட்டியில் 24.07.2020 ம் தேதியிட்ட இந்திய சாட்சிய சட்டம் 65(B) மற்றும் 2(A) of Bankers book Evidence Act ன் கீழ் வழங்கினேன். **மீனா என்பவரின் வணக்கு எண். 127110043304 கணக்கிற்கான 01.01.2019 முதல் 07.09.2020 வரைக்கான வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.28 ஆகும். 24.07.2020 ம் தேதியிட்ட இந்திய சாட்சிய சட்டம் 65(B) மற்றும் 2(A) of Bankers book Evidence Act ன் கீழ் வழங்கிய சான்றிதழ் அ.சா.ஆ.29 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

மீனா PMKISSAN திட்டத்தின் கீழ் பயனாளர் என்ற விபரம் தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 165/2024** Date: 02.06.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 28** |
| Name | : | பெருமாள், தலைமை காவலர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி CBCID காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2020 ம் தேதி CBCID காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியிலிருந்தபோது ஆய்வாளர் அவர்கள் PMKISSAN திட்டத்தின்கீழ் தகுதியற்ற விவசாய பயனாளர்களின் விபரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களால் மின்னஞ்சல் வாயிலாக அனுப்புவதாகவும், அது அதிக பக்கங்களை கொண்டதால் அதை குறுந்தகட்டில் பதிவிறக்கம் செய்ய கூறினார். அதன்படி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் jdagridpi17@gmail.com என்ற மின்னஞ்சலிலிருந்து insdpicbcid@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிய தகுதியற்ற விவசாய பயனாளர்களின் விபரங்களை குறுந்தகட்டில் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி பணியை CBCID அலுவலகத்திலிருந்து கணினியில் பதிவிறக்கம் செய்தேன். **தகுதியற்ற விவசாய பயனாளர்களின் விபரங்கள் அடங்கிய குறுந்தகடு அ.சா.பொ.3 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

தகுதியற்ற பயனாளர்களுக்கு எவ்வாறு பணம் வரவு வைக்கப்பட்டதோ அதேபோல் தான் மீனா மற்றும் வித்யாவிற்கு வரவு வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**